விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 02 செவ்வாய்க்கிழமை (16.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# இலங்கையின் பூர்வீகக் குடிகள்

# சைவத் தமிழ் மக்களே

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

- மகாவம்சம் வரலாற்று நூல் அன்று
- இதுவரைக்கும் தமிழர்க்கு எதிராக நடந்துவந்திருப்பது இனப்படுகொலையே
- எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியாலும் தமிழர்களுக்கான தீர்வை தரமுடியாது

கொழும்பு ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி தொடர்பாக நீதியரசர் விக்னேஸ் வரனால் அனுப்பி வைக்கப்பட்ட செய்தி குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது. 15

## குணமடைந்து வீடு திரும்பியவருக்கு மீண்டும் கொரோனா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பிய பெண்ணொருவர் மீண்டும் கொரோனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளார்.

அவர் மீளவும் தொற்றிற்கு உள்ளாகியமை நேற்று 15

## 19 ஆவது திருத்தத்தின் குறைபாடுகளை புதிய அரசு திருத்தியமைக்கும் - ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய அரசாங்கத்தில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டு நீக்கப்பட்ட 17 ஆவது அரசியலமைப்பின் ஒரு சில விடயங்கள் முழுமையாக செயற்படுத்தப்படும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் இலட்சணம் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக வெளிப்பட்டுள்ளது. 15

**கொரோனா வைரஸ்** பாதிப்பு **1,905** புதிய தொற்றாளர்கள் **16** பலி **11**

## முல்லையில் தேர்தல் ஒத்திகை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்தில் நேற்று ஒத்திகை வாக்களிப்பு நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை இந்த வாக் களிப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான க.விமலநாதன் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன்சிறீ 15

## கடலட்டை பிடிப்பதற்கு எதிராக வடமராட்சியில் கவனயீர்ப்பு போராட்டம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்ட விரோதமான முறையில் வாடி அமைத்து கடலட்டை பிடிப்போரை உடனடியாக வெளியேற்று மாறு கோரி மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. 15



## முல்லையில் ஒருவருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை 45 15

## பிறந்தநாள் கொண்டாடிய 26 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு குழுவின் தலைவன் ஒருவனின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக ஒன்றுகூடிய 26 இளைஞர்கள் நேற்று மருதனார்மடத்தில் வைத்து யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தின் பிரபல வாள்வெட்டுக் குழுவொன்றின் தலைவன் ஒருவனின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக 15




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவ மயமாகும் இலங்கை

## சிவில் சமூகம் இணைந்து கண்டனம்

(கொழும்பு)

**இலங்கையின் சுகாதாரம், கல்வி, அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகத் துறைகள் மட்டுமல்லாது நீதித்துறையிலும் உள்ள சிவில் செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்துவதற்கான நிலையான நகர்வு தென்படுகின்றது என இலங்கை சிவில் சமூகத்தினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**

இது நீண்டகாலமாக நிலைத்துவரும் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஓர் இடராகும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலணிகள் தொடர்பில் கண்டனம் தெரிவித்து நாடு முழுவதும் உள்ள 59 சிவில் சமூக பிரதிநிகள் மற்றும் 16 சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கையொப்பமிட்டு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கோவிட் - 19 சூழலுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மூன்று ஜனாதிபதி செயலணிகளை நியமித்தார். இவற்றில் ஒரு செயலணிக்கு ஒட்டுமொத்த சமூக வாழ்விற்கு நிலையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கான முன்னெடுப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புகளை மேற்கொளள பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே உருவாக்கப்பட்டு இயங்கி வரும் தொல்பொருள் திணைக்களத்தை புறக்கணித்து, இச்செயலணிகள் பரந்த மற்றும் தெளிவற்ற ஆணைகளை கொண்டுள்ளதோடு பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறாத நிலையில் அவற்றின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதை மேற்பார்வை செய்ய முடியாத ஓர் காலகட்டத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

நாடு ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளப்படும் வேளையில் விசேட அதிகாரங்களை பயன்படுத்த தகுந்த மற்றும் வலுவான காரணங்கள் காட்டப்பட வேண்டும். முன்னொருபோதும் நிகழாத விதத்தில் சுகாதார, பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காணப்படும் ஒரு கட்டத்தில் தொல்பொருள் மற்றும் மரபு ரீதியிலான விடயங்களுக்கு முன்னுரிமை வழங்குவது உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய ஓர் விடயமாகும்.

இச்செயலணிகளின் உறுப்பினர்களில் மிக பெரும்பாலானவர்கள் சிங்கள சமூகத்தை சார்ந்தவர்களாவர். கிழக்கு மாகாணத்தில் பரவலாக வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை புறக்கணித்துவிட்டு அதிகளவிலான பௌத்த மத குருக்களை இம்மாகாணத்திற்கான செயலணி கொண்டுள்ளது. இச்செயலணிகள் மேற்குறிப்பிட்ட சமூகங்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது செயற்படும் சாத்தியப்பாடுகளே காணப்படுகின்றது. அத்துடன் அரசாங்கம் முன்னெடுக்கும் பெரும்பான்மைப் போக்கையே இவை பிரதிபலிக்கின்றன என்றுள்ளது. (ம-3)

# பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்கிய சம்பவம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மூவர் மீது முல்லைத்தீவுப் பொலிஸார் தாக்கிய சம்பவம் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றைய தினம் விசாரணை இடம்பெற்றது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த 3 நபர்கள் மீது முல்லைத்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகள் கடந்த மே மாதம் ஆறாம் திகதி இரவு தாக்குதல் நடத்தியதாக தாக்குதலுக்குள்ளானவர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஒரு நபருடைய பெயரைக் கேட்டு அவர் எங்கே என்றும் அவரைக் கொண்டு வந்து உடனடியாக ஒப்படைக்குமாறு கோரியுமே தம்மீது தாக்குதலை நடத்தியதாக பாதிக்கப்பட்டோர் தெரிவித்ததுடன் இது தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற நிலையில் முறைப்பாடு தேவையில்லை நீதிமன்றம் சென்று நீங்கள் எதிர்பார்ப்பதை நாம் தருகிறோம் என்று கோரியதாக பாதிக்கப்பட்ட நபர்கள் குற்றம் சுமத்தினர்.

குறித்த விடயம் தொடர்பாக வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்தபோதும் இதுவரை நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில்.

இது தொடர்பான விசாரணை நேற்று வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது. விசாரணைக்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரீ மற்றும் முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர், பாதிக்கப்பட்டோர் சமுகமளித்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணை நேற்றையதினம் முற்றுப்பெறாத நிலையில் இரண்டாம் கட்ட விசாரணைக்காக எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் சமுகமளிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக குழுவால் இருதரப்புக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,281)

# உயர்தரப் பரீட்சைத் திகதியை மாற்றம் செய்யத் தயார்

## கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும



(மாத்தறை)

2020க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு அறிவிக்கப்பட்ட திகதிகளைத் திருத்தத் தயாராக இருப்பதாக கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

2020 க.பொ.த உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு சில தரப்புகள் கல்வி அமைச்சிடம் கோரிக்கைகளை முனவைதுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

3ம் ஆண்டு
நினைவஞ்சலி



அன்னை மடியில் 09-01-1952
ஆண்டவன் அடியில் 22-05-2017

அமரர் மகேசு தங்கரட்ணம்

தக்கதுணையாய் அமைந்து
தாங்கியெமை வழிநடத்தி
தத்தளிக்க விட்டுச் சென்ற
தலைவியே எம் தங்கமே!
பத்துத் திங்கள் சுமந்து பெற்று
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பாதியிலே பரிதவிக்க போனதெங்கே? எம் தாயே!
பார்க்கும் வகையறியா பாவிகளாய் தேடுகிறோம்
மாற்று வழியின்றி பரமனடி நாடுகிறோம்
ஆத்ம சாந்திக்காய் அவனருளை வேண்டுகிறோம்.

தும்பளை, பருத்தித்துறை. (C-9709) குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

பெயர் மாற்றம்

கடற்கரை வீதி, தாச்சிக்குடாவில் வசிக்கும் நித்தியசீலன் ஜெயிந்தசெல்வம் (லக்ஷன்) ஆகிய எனது பெயரை **நித்தியசீலன் அஜய்** என மாற்றம் செய்து இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் நித்தியசீலன் அஜய் என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன். (3028)

உண்மையுள்ள **நித்தியசீலன் அஜய்**

# மைத்திரியின் நகர்வு தொடர்பாக அவதானமாக இருக்கின்றோம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



(கொழும்பு)

தாமரை மொட்டின் உதவியுடன் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு முயற்சிக்கும் மைத்திரிபால சிறிசேனவின் அடுத்தகட்ட நகர்வுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பியகம பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"நல்லாட்சி அரசாங்கமே நாட்டிற்கு பல தீங்குகளை செய்துள்ளது. அதாவது இலங்கை வரலாற்றில் நல்லாட்சி அரசாங்கம்தான் இவ்வாறு அதிகளவு தீங்குகளை செய்துள்ளது.


நல்லாட்சியின் சகாப்தம் இலங்கையின இருண்ட சகாப்தமாக மாறியுள்ளது. அனறு நாங்கள் மொட்டினை உருவாக்கும்போது, முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன, வீதி வீதியாகச் சென்று அழைக்கின்றோம் என்றும் மொட்டு உருவாகினால் பார்ப்போம் என்றும் தெரிவித்துவிட்டு தற்போது மொட்டுச் சின்னத் தில் போட்டியிடுகிறார்.

அவர் மொட்டுக் கட்சியில் மறைந்து பாராளுமன்றத்திற்கு செல்ல முயற்சிக்கின்றார்.

எனவே மைத்திரிபாலவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக நாங்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# பாரதூரமான குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனையை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும்

## பிவிதுறு ஹெல உறுமய வேண்டுகோள்



(கொழும்பு)

**பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களுக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஜனாதிபதி நாட்டின் நலன் கருதி செயற்படுத்த வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் பிரதித் தலைவர் மதுமாதவ ஹேரத் வேண்டுகோள் விடுத்தார்.**

இனவாதிகளையும் அரச சொத்து மோசடியாளர்களையும் மக்கள் இம்முறை புறக்கணித்து சிறந்தவர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுபீட்சமான எதிர்காலம் என்ற தொனிப்பொருளுக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கிறார்.

நாட்டில் இடம்பெறும் பாதாள உலகக் குழுவினது செயற்பாடுகளுக்கு சிறைச்சாலைகளில் இருந்தே திட்டம் வகுக்கப்படுகின்றது என பல சம்பவங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டங்கள் கடுமையாக்கப்பட்டால் மாத்திரமே குற்றங்கள் குறையும். பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களுக்கு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என்பது எமது தனிப்பட்ட கோரிக்கையாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# தரம்-1 மாணவர்களுக்கான அனுமதி; விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் 1 ஆம் வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதற்கான கால எல்லை எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அரச பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், விண்ணப்பப்படிவம் மற்றும் அதற்கான உரிய அறிவுறுத்தல்கள் அடங்கிய கையேடு ஆகியன கல்வி அமைச்சு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய விண்ணப்பங்களை, moe.gov.lk எனும் இணையத்தளத்தில் தரவிறக்க முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அடிப்படையில் இருப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணமாக, கடந்த 5 வருடத்துக்கான வாக்காளர் பதிவேடு குறித்த விபரங்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைகளுக்கு முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக, விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான தகவல்களை கிராம உத்தியோகத்தரிடம் அல்லது தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் அறிவித்துள்ளது. (ஜ-8)

# பொதுத் தேர்தலில் 3 இலட்சம் அரச பணியாளர்கள் சேவையில்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரச பணியாளர்கள் 3 இலட்சம் பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கையில், பொதுத் தேர்தலில் சுகாதாரத் துறை ஊழியர்கள் அதிளவில் உள்வாங்கப்படவுள்ளதன் காரணமாக தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் கடமைகளில் இதற்கு முன்னர் இணைத்துக்கொள்ளப்படாத சுகாதார தரப்பினர் எதிர்வரும் பொதுத்தேர்தலில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இந்த நிலையில் கடந்த தேர்தல்களில் அரச அதிகாரிகள் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இணைத்துக்கொள்ளப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் கொரோனா!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் எச்சரிக்கை



(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் கொரோனா தொற்று ஏற்படும் ஆபத்து இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண எச்சரிக்கை விடுத்தார். கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தடுப்பிற்காக வழங்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளை பொதுமக்கள் புறக்கணித்து செயற்படுவதனாலேயே இந்த ஆபத்து ஏற்படலாம்.

தனிமைப்படுத்தல் நடைமுறைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளதே இதற்குக் காரணம். சில இடங்களில் தனி மைப்படுத்தல் சட்டங்களைக் காண முடிவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# தொல்பொருள் ஜனாதிபதி செயலணியில் தமிழர்களும் உள்வாங்கப்பட வேண்டும்

## கிழக்கு உயர்கல்வி மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

கிழக்கில் தொல்பொருள் பிரதேசங்களை கண்காணிக்கும் ஜனாதிபதி செயலணியில் தமிழர்களும் இடம்பெறவேண்டுமென கிழக்கிலங்கை உயர் கல்வி மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள வொய்ஸ் ஒப் மீடியா ஊடக வள நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மாணவர் ஒன்றியத்தினர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அண்மையில் ஜனாதிபதியால் கிழக்கிலங்கையில் இருக்கின்ற தொல்பொருள் சார்ந்த ஆவணங்களை ஆவணப்படுத்துவதற்கு நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் அதுவும் கிழக்கைப் பொறுத்தவரையில் தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பான அகழ்வாராய்ச்சிகளில் முதன்முறையாக அரச சார்போடு நடக்கிறது என்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதிலிருக்கின்ற சில குறைபாடுகளை நாங்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதாவது, ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட இந்த குழுவில் இருப்பது இராணுவமும் இராணுவம் சார்ந்த அமைப்பினருமே அதிகப்படியாக உள்ளனர்.

ஜனாதிபதி இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பதிலும் நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லவும் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்ற அதேநேரம், இவ்வாறான ஒரு செயற்பாடு இலங்கையில் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அது தமிழர்களின் உணர்வுகள் சார்ந்த விடயங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய முன்னெடுப்புக்களை சாத்தியமாக்காத ஒரு விடயமாக இருக்குமென்பதை நாங்கள் அறியப்படுத்துகின்றோம்.

இலங்கை தேசத்தில் கிழக்கில் இம்முயற்சிகள் முன்னெடுப்பது மிகமிக மகிழ்ச்சிக்குரிய விடயம். அதேநேரம் அந்தக் குழுவில் இருக்கும் அங்கத்தவர்களுடன் இந்த துறைசார்ந்த வல்லுநர்களான இரண்டு தமிழ் பிரஜைகள் என்றாலும் இக்குழுவில் இணைக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் கிழக்கில் காணப்படுகின்ற தொல்பொருள் சார்ந்த ஆவணங்களும் மிக மிக உறுதியான நம்பகத்தன்மையுடன் ஆவணப்படுத்தப்படும் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## வலயக் கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு தரம்-10,11 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | கற்றல் தலைப்பு | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID |
|---|---|---|---|---|---|---|
| 16.06.2020 செவ்வாய் | 6.00 மு.ப-6.50 மு.ப | வரலாறு | உலகப்போர்... | கே.மயூரன் | வ/அல்.இக்பால் ம.வி | 820 7836 4399 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(TM) | தரவுகளை வகைக்குறித்தல் | எம்.பிரபாகரன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 876 3215 8902 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(EM)-10 | Equation | ஜே.சொரூபன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 824 6217 3272 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(TM) | Paper Class | பி.ரவிநாதன் | வ/பெரிய கோமரசன்குளம் ம.வி | 845 7252 9127 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(EM) | Chemical reaction | எஸ்.துஷ்யந்தன் | வ/செட்டிகுளம் ம.வி | 879 5395 3522 |
| | 10.00 மு.ப-10.50 மு.ப | தமிழ் | குறுவினா விடை | வி.செல்வரட்ணம் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 848 8744 6779 |
| 17.06.2020 புதன் | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(TM) | பெருக்கல் விருத்தி | ரி.சுகர்சன் | வ/அன்புரம் நா.வி | 876 3215 8902 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(EM)-11 | Pythagoras Theorem | ஜே.சொரூபன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 824 6217 3272 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(TM) | இனப்பெருக்கம் | எம்.ஹம்சா | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 845 7252 9127 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(EM) | Excretory System | எம்.நிக்சலா | வ/காமினி தேசியப் பாடசாலை | 879 5395 3522 |
| | 10.00 மு.ப-10.50 மு.ப | ஆங்கிலம் | Vocabulary | எஸ்.அருண் | வ/இலங்கை திருச்சபை த.க.பா | 892 3109 8433 |
| | 11.00 மு.ப-11.50 மு.ப | வரலாறு | இலங்கையின் அரசியல் | கே.வசந்தரூபன் | வ/அல்.இக்பால் ம.வி | 820 7836 4399 |

## வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தரம் 05 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID | Password |
|---|---|---|---|---|---|---|
| 16.06.2020 செவ்வாய் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பி.சுதர்ஷன் | கிளி/பிரமந்தனாறு ம.வி | 892 4811 5511 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | எஸ்.சிவநாதன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 848 8778 0696 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | சுற்றாடல் | பி.சசிரதன் | வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி | 977 149 6807 | pdenp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | சுற்றாடல் | செல்வி.கே.குவேனி | யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 819 5133 8577 | denp |
| 17.06.2020 புதன் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 2 | எஸ்.நிசாந்தன் | மு/அம்பலப்பெருமாள்குளம் அ.த.க.பாடசாலை | 879 7719 2245 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | ஆர்.ராகுலன் | மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | 832 2651 2919 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பொன்.பிரகலாதன் | கிளி/விவேகானந்தா ம.வி | 977 149 6807 | pdenp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | ஆங்கிலம் | எஸ்.நிமலகுமார் | யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 881 9346 3915 | denp |
| 18.06.2020 வியாழன் | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பி.சுதர்சன் | கிளி/பிரமந்தனாறு ம.வி | 859 4070 7502 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | பி.ஜசிதரன் | யா/கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை | 852 9853 1796 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | சுற்றாடல் | திருமதி.ரி.கிருபாளன் | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை | 977 149 6807 | pdenp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | எஸ்.வினோத்குமார் | யா/யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை | 864 3528 3888 | denp |
| 19.06.2020 வெள்ளி | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | எஸ்.சிவநாதன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 830 6927 0782 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | என்.பத்மராஜ் | மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி | 833 3793 8820 | denp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | திருமதி.ரி.சுரேஸ்குமார் | யா/புனித ஜோன்பொஸ்கோ ம.வி | 899 8656 9003 | denp |
| 20.06.2020 சனி | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | எஸ்.நிசாந்தன் | மு/அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பாடசாலை | 831 5610 7007 | denp |
| | 6.00 மு.ப - 8.00 மு.ப | பொது | திருமதி.ஜே.சிவகுமாரன் | மு/ஸ்ரீசுப்பிரமணியம் ம.வி | 819 7931 1985 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பொன்.பிரகலாதன் | கிளி/விவேகானந்தா ம.வி | 977 149 6807 | pdenp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 1 | சண்.சுதர்சன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 812 5085 8223 | denp |
| 21.06.2020 ஞாயிறு | 6.00 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | ஜி.ஜங்கரன் | தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா | 851 8387 9662 | denp |
| | 6.30 மு.ப - 8.00 மு.ப | பகுதி 1 | பி.சசிதரன் | வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி | 977 149 6807 | pdenp |
| | 5.00 பி.ப - 7.00 பி.ப | பகுதி 2 | சண்.சுதர்சன் | யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | 875 3098 9037 | denp |

## வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தரம் 11 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | Meeting ID | Password |
|---|---|---|---|---|
| 16.06.2020 செவ்வாய் | 6.00 மு.ப - 8.00 மு.ப | ICT | 249 156 8241 | denp |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | விஞ்ஞானம் | | |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு | | |

# அரச ஊடகம் பிரதமருக்கு ஆதரவாகப் பிரசாரம்

## கபே குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அரச ஊடகமொன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பிரசாரங்களை முன்னெடுக்கின்றதென தேர்தல் கண் காணிப்பு அமைப்பான கபே குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கபே இதனை தெரிவித்துள்ளது.

குறித்த கடிதத்தில் கபே தெரிவித்துள்ளதாவது, 'பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் 50 வருடகால அரசியல் வாழ்க்கை பற்றிய தொடர் நிகழ்ச்சிகளின் மூலம் குறித்த அரச ஊடகம் அவரை ஊக்குவிக்கின்றது.

இது அரச வளங்களை தவறாகப் பயன்படுத்தும் நடவடிக்கையாகும்.எனவே இவ்விடயத்தில்தேர்தல்கள்ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 515 பேர் கைதாகினர்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் உள்ள 104 பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 515 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 6மணி தொடக்கம் மாலை 6 வரை குறித்த விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 229 நபர்களும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 286 நபர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ஐ-8)

# பாகிஸ்தானிலிருந்து 129 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா தாக்கம் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் பாகிஸ்தானில் சிக்கியிருந்த 129 பேர் நேற்று விசேட விமானம் மூலம் நாட்டிற்கு மீள அழைத்து வரப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான விசேட விமானத்தின் மூலம் பாகிஸ்தானில் இருந்து குறித்த அனைவரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கொரோனா தாக்கம் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீள நாட்டுக்கு அழைக்கும் செயற்றிட்டத்தை இலங்கை அரசாங்கம் கட்டம் கட்டமாக செயற்படுத்தி வருகின்றது. இந்தச் செயற்றிட்டத்தின் அடிப்படையிலேயே குறித்த இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான யு.எல். 1282 எனும் இலக்க விமானத்தின் மூலம், பாகிஸ்தானின் லாஹூர் மற்றும் கராச்சி ஆகிய இரு நகரங்களிலும் சிக்கியிருந்த 129 பேர் நேற்று அதிகாலை 4.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ஐ-8)

# திருப்பியனுப்பப்பட்ட முன்னாள் ஜனாதிபதி

(பொலநறுவை)



பொலநறுவை பௌத்த மையத்திற்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்வுக்காக நேற்று திங்கட்கிழமை அவர் சென்றபோதே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன இம்முறை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுஜன முன்னணி சார்பாக பொலநறுவை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில், இந்த நிகழ்வு தேர்தல்கள் சட்டத்தை மீறி இடம்பெறுவதாக குறித்த இடத்திற்கு வருகைதந்த தேர்தல் அதிகாரிகள் தெரிவித்த நிலையிலேயே அவர் திருப்பியனுப்பப்பட்டார். (ஐ-4)


# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)-2020

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சமைத்த உணவு வழங்கல் மற்றும் சலவை சேவை வழங்கலுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து பொதியிடப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

**01. சமைத்த உணவு வழங்கல்**

| இல | வைத்தியசாலைகளின் விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/K/RDHS/CF/2020/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 02 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/K/RDHS/CF/2020/02 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 03 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/K/RDHS/CF/2020/03 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 04 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | NP/K/RDHS/CF/2020/04 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 05 | பிரதேச வைத்தியசாலை வேரவில் | NP/K/RDHS/CF/2020/05 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |
| 06 | பிரதேச வைத்தியசாலை பூநகரி | NP/K/RDHS/CF/2020/06 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 1000/- |

**02. சலவை சேவை வழங்கல்**

| இல | வைத்தியசாலைகளின் விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/K/RDHS/LS/2020/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 02 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/K/RDHS/LS/2020/02 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 03 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/K/RDHS/LS/2020/03 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 04 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம் | NP/K/RDHS/LS/2020/04 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 05 | பிரதேச வைத்தியசாலை வேரவில் | NP/K/RDHS/LS/2020/05 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 06 | பிரதேச வைத்தியசாலை பூநகரி | NP/K/RDHS/LS/2020/06 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs. 500/- |
| 07 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/K/RDHS/LS/2020/07 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs.500/- |
| 08 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/K/RDHS/LS/2020/08 | RDHS Office, A9 Road, Kilinochchi | 5,000.00 | Rs.500/- |

**03. டயர்கள் மற்றும் மின்கலன் கொள்வனவு**

| இல | விபரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப்படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத்தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | றயர்கள் | NP/K/RDHS/Tyre/2020/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | - | - |
| 02 | மின்கலன்கள் | NP/K/RDHS/Battery/2020/02 | RDHS Office, A9 Road, Kilinochchi | - | - |

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ➢ விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ➢ அத்துடன், சமைத்த உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ➢ அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஏ9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் தமிழ் மொழி மூலமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஏ9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 16.06.2020 ஆம் திகதி முதல் 29.06.2020ஆம் திகதி வரை மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்விகள் 30.06.2020ஆம் திகதியன்று பிற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஏ9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ்குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 26 ஆனி 2020 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.

8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

9. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலை மனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(C-9705)

## இராசிபலன்

16.06.2020
ஆனி 02, செவ்வாய்க்கிழமை
தசமி காலை 6.58 மணிவரை
அச்சுவினி முழுவதும்
சுபநேரம் 10.23-11.53 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சந்திராஷ்டமம்: அத்தம்

-வளவன்-

**மேஷம்** — உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** — எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் வாய்ப்புண்டு, மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் யோசனைக்கு நல்ல பராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்** — சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** — குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** — புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

**தனுசு** — கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**மகரம்** — பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கும்பம்** — உங்களை வெறுத்தவர்கள் மனம் மாறுவர், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** — எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

வெற்றியின் பொருள் விடாமுயற்சி

# தற்போது தேர்தல் காலமென்பதால் "சப்ரி கமக்" வேலைத்திட்டத்தில் தலையிடாதீர்

## சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர்

(சாவகச்சேரி)

தற்போது தேர்தல் காலம் என்பதால் பிரதேசசபை உறுப்பினர்கள் "சப்ரி கமக்" நிறைவான கிராமம் வேலைத் திட்டத்தில் தலையிடுவதனை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சப்ரி கமக் வேலைத் திட்டத்தில் தற்போது அரசியல் தலையீடுகள் செய்வதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். தேர்தல் கால கட்டத்தில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் நடக்க வேண்டும்.

தற்போது தேர்தல் சட்டத்தை அனுசரித்தே செல்ல வேண்டும். சப்ரிகமக் வேலைத்திட்டத்தை இக்காலத்தில் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்தால் போதும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (2-5-30)

# 33 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)


நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 33 கடற்படையினர் நேற்று குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறினர். கடற்படை ஊடக பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் இசுறு சூரிய பண்டார இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இதுவரை குணமடைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 712 ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம், 175 கடற்படை சிப்பாய்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# சிங்கள மொழிக் கற்கை முதலாம் தவணைப் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தினால் நடத்தப்பட்ட 2018/2019 கல்வி ஆண்டிற்குரிய B பிரிவு சிங்கள மொழிக் கற்கை மாணவர்களுக்கான முதலாம் தவணை இறுதிப் பரீட்சை முடிவுகளை இன்று 16.06.2020 செவ்வாய்க் கிழமை முதல் நிலையத்தில் பார்வையிட முடியும் எனவும் டிப்ளோமா கற்கை நெறியினை தொடர்வதற்கான விண்ணப்பங் களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வடமாகாண மும்மொழிக் கற்கை நிலைய பதில் பணிப்பாளர் பி.என்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (2-5)



நாவாந்துறை வடக்குசென். மேரிஸ் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் ஒத்துழைப்புடன் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

# கருத்தரங்கு இறுவெட்டு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக் களமும் தொண்டை மானாறு வெளிக்கள நிலையமும் இணைந்து நடத்தத் திட்டமிட்டிருந்த க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான 5 ஆம் தவணைப் பரீட்சை Covid-19 காரணமாக நடை பெறவில்லை.

ஆனாலும் அப்பரீட்சை வினாத்தாள்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வீட்டிலிருந்து பயிற்சியில் ஈடுபடுவதற்கு அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவ் வினாத்தாள்களுடைய புள்ளித் திட்டமிடல் தொடர்பான துறைசார் வளவாளர்களின் கருத்தரங்கு காணொளி இறுவெட்டு வடிவில் பிரதி செய்யப்பட்டு வட மாகாணத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்று உத்தியோகபூர்வமாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரிடம் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினரால் கையளிக்கப்பட்டது. (5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய். | 100 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 135 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 140 | 150 |
| தக்காளி | 180 | 200 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 80 |
| கோவா | 160 | 120 | 130 | 160 |
| கரட் | 140 | 180 | 190 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 120 |
| வாழைக்காய் | 40 | 80 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 150 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 100 | 140 |
| கறிமிளகாய் | 80 | 80 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60-50 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 280 | 250 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 80 | 80 |

# சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தும் வயதெல்லை 16 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதற்கான வயதெல்லை 14 இலிருந்து 16 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானமொன்று நேற்று முன்தினம் அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தொழில்புரிவோரின் உரிமைகளைப் பாதுகாக்க தொழில் திணைக்களத்தால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை பூச்சிய மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளையும் தொழில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி 1956ஆம் ஆண்டு 47ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் 14 வயதாக காணப்படும் தொழில் புரிவதற்கான வயதெல்லையை 16 ஆக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9706)

றெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: 13 ¼ செவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.தபாலக உதவியாளர்.
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்.
தொ.இ: B/10801

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நியூசிலாந்தில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். இவர் விவாகரத்தானவர். ஒரு பெண் பிள்ளை தாயாருடன்.. எனவே கணவனை இழந்தவர், விவாகரத்தானவர் ஏற்கப்படும்.
தொ.இ: B/10802

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 3 சூரி, செவ் 9இல்
உயரம்: 176cm
தகைமை/தொழில்: பட்டதாரி. Junior Executive Officer- Bank.
எதிர்பார்ப்பு: படித்த வேலை செய்யும் மெல்லிய உயரமான மணமகள்
தொ.இ: B/10804

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 22 ½ செவ் 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்த வியாபாரம் மற்றும் கமம்.எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண். கிளிநொச்சியில் வசிக்க வேண்டும்.
தொ.இ: B/10805

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: சூரி,செவ் 9 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் க.பொ.த.உ.த. வங்கி ஊழியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/10803

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 58 செவ் 7 இல்
உயரம்: 157cm
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி. Quantity Assurance Engineer
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் இலங்கை மணமகனாயின் கொழும்பு விரும்பத்தக்கது
தொ.இ: G/10806

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma in English.
எதிர்பார்ப்பு: சாதாரண அரச, தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/10809

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: செவ் 5 இல்
தகைமை/தொழில்: M.Sc IT, Senior Analyst in Standard Chartered Bank in India.
எதிர்பார்ப்பு:. தகுந்த வரன். இந்தியாவில் வசிக்க வேண்டும்.
தொ.இ: G/10810

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



உ
சிவமயம்



## காரைநகர் களபூமி திக்கரை முருகன் சரவணபவ!
## வள்ளி மணவாளா! குமார மூர்த்தி! திக்கரை வாழ்தேவ தேவ!
## தவப்பயன், மேலுலக இன்பம், முத்தி வீடு, சுவர்க்க வாழ்வு, அரச வாழ்வு, இந்த ஆறினையும் தந்து உம்மைப் புகழும் அன்பையும், ஆற்றலையும் அருள்புரிவீரோ!

**குமரா சிவன்சேய் குறக் கன்னி நாதா**
**குகா கந்த சேனாப தீசக்தி பாணீ**
**எமரர் வப்பர்போ தார காரீ மயூரரா**
**இனாதீவு வாய் திக்கரையான் அஞ்சலென்னே...**

குமாரக் கடவுளே, பரமசிவன் மகனே, குகனே, கந்தப் பெருமானே! தேவர்களின் சேனைத் தலைவனே, வேலேந்தியவனே, மயில்வாகனனே, வல்லீபதியே, அடியவர்களின் துயரைக் களைபவனே, பிரபுவே, தாரகனை அழித்தவனே, திக்கரை முருகனே! எம்மை எப்போதும் காத்தருள வேண்டும்.

19ஆம் நூற்றாண்டில் காரைநகர் வாழ்ந்த கார்த்திகேயப் புலவர் நல்லை நகர் ஆறுமுக நாவலர் காலத்தவர். இருவரும் இருபாலை சேனாதிராய முதலியாரிடம் கல்வி பயின்றவர்கள்.புலவர் திரிபுர அந்தாதி,திக்கரை அந்தாதி, போச்சுட்டி அந்தாதி, தன்னை அந்தாதி பாடிய பெரும் புலவர் அந்தணர் குலத்தில் பிறந்த இவர் 19 ஆம் நூற்றாண்டு நடுப் பகுதியில் திக்கரைக் குறிச்சியில் இருந்து திக்கரை முருகனுக்கு நித்திய பூசை செய்த பெருந்தகை. அதேபோன்று காரைநகர் சிவன் கோவில் (ஈழத்துச் சிதம்பரம்) 64 ஆண்டுகள் பிரதம குருவாக இருந்தவரும்,அகில இலங்கை பிராமணர் சங்கத் தலைவராக பல ஆண்டுகள் இருந்தவரும் உத்தரகோச மங்கையில் இருந்து வந்த அந்தணர் குலத்தில் அவதரித்த வருமான, சிவயீ கணபதீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்கள் ஆலய மகோற்சவ குருவாக விளங்கியவர். இவர்கள் இருவரும் திக்கரை முருகனுக்கு தாம் பூசை செய்ய கிடைத்தது பெரும்பேறு என கருதிக் தொண்டாற்றிய பெருந்தகைகள். இவர்கள் காலத்தில் பூசை , மகோற்சவங்களை பார்த்த அடியார்களாகிய நம் முன்னோர்கள் பெரும் பேறு உடையவர்கள்.

50 காலங்களில் திக்கரை முருகமூர்த்தி கோவில் மகோற்சவ குருவாக சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் இருந்த காலத்தில், இரவுத் திருவிழாவின் போது சாமி வெளிவீதி உலா வந்து அக்காலங்களில் சின்னமேளம் என்று சொல்லுகிற சதுர்க்கச்சேரி நிகழ்ந்த வேளை.ஆலய உள் வீதியில் குருக்கள் சிறிது கண் அயர்ந்து போனார். எம் பெருமான் குருக்கள் கனவில் சிவன் கோவிலில் திருடர்கள் உட்புகுந்து விட்டார்கள் என்று அறிந்து,சிவன் கோவில் நினைவில் இருந்த குருக்கள் ஐயா, ஓர் அடியாரை அழைத்து, சிவன் கோவிலில் திருடர்களாம் கனாக் கண்டேன் எனவும் உடன் சென்று பார்த்து வரும்படி அனுப்பினார்.அந்த அடியார் சிவன் ஆலயம் சென்று பார்த்த பொழுது, அங்கு திருடர்கள் ஓடு கழட்ட முயற்சி செய்தவர்கள், அங்கு ஒரு பாம்மைக் கண்டு, உளியையும் தவறவிட்டு ஓடி மறைந்ததாக பார்த்து வந்த அடியார்கள் ஐயாவிடம் அன்புடன் கூறினர். இவ்வாறு பல அதிசய, அற்புதங்கள் நிறைந்த முருகன் ஆறாம் நாள் திருவிழா, காமம் முதலிய உட்பகை ஆறும் கலை முதலிய அத்துவா ஆறும், இருத்தல் முதலிய கன்ம மலகுணங்கள் ஆறும், பிரம சாலோகம் முதலிய ஆறும் நீக்குதல். ஆகவே திருக்கோயிலில் நிகழும் ஆண்டு விழாக்களைத் தரிசிக்கச் செல்லுவோர் விழாக்களின் உண்மைப் பொருளையுணர்ந்து ஆசாரசீலராய் விரதமிருந்து இயன்றளவு நிவேதனப் பொருட்களுடன் சென்று ஆசாரியாரைக் குருவாக எண்ணி வழிபட்டு அவர் செய்யும் தம்ப,விம்ப, கும்ப பூசைகளை மெய்யன்போடு தரிசித்தல் வேண்டும்.

சிவஞானமயமான திருநீற்றினை அணிந்து கொள்வார்க்கு நோயும் பேயும் விலகி எல்லா நலன்களும், சர்வமங்கலங்களும் பெருகும். சிவஞான நூல்களை ஓதுகின்றதில் விருப்பம் கொண்டுள்ள அன்பர்கள் பூசுகின்ற உண்மைத் திருநீறானது உண்மைப் பதவியான இறைவன் திருவடிகளை அடியேனுக்குக் கிட்டுமாறு அருள்புரிவீராக என

**"அரிகிரி நாதர் திருப்புகழில்"**
**பூரணச்சிவ ஞான காவியும்**
**ஓது தற்புணர்வான நேயர்கள்**
**பூசு மெய்த்திரு நீறிடா இருவினையேனைப்**
**பூசி மெய்பதமான சேவடி**
**காண வைத்தருள் ஞான மாகிய போத கத்தினை யேயு மாறருள் புரிவாயே**

என திருவாய் மலர்ந்து அருளினார்.

திருமுறைகளை ஓதுகின்ற ஓதுவார் மூர்த்திகள் பயபத்தியுடன், பூசிக் கொள்கின்ற "சின்னம்" திருநீறு எனப்படும். பக்தியோடு வழிபடும் முறையில் தொன்மையான இலக்கியம் இருக்கு வேதத்திலேயே இறைவனைத் தோத்திரம் மூலம் வழிபடும் மரபு காணப்படுகின்றது.திருநீறு வேதத்திலே உள்ள சின்னம். ஏனைய சின்னங்களை வேதம் கூறவில்லை.பஸ்மஜாபாவம் என்ற உபநிடதம் திருநீற்றைப் பற்றி இனிது கூறுகிறது. பல பிறவிகளில் தவம் செய்திருந்தால் தான் திருநீற்றைப் புனையும் பெருவாய்ப்பு உண்டாகும் திருநீறு சிவஞான சாதனமாகும்.

முருகா என உருகுபவர்க்கருள்பவரே! சூரசங்கார! சுடர் வேலவா!சிவகுமாரரே! திருமால் மருகரே!காரைநகர் களபூமி திக்கரை வாழ்தேவா! பிறவிக்கடலில் அடியேன் வீழ்ந்து வருந்தாமுன்னம் "முருகா,குமரா,கந்தா" என்று உருகி ஓதி, இவ்வுலகினிலிருந்து பூத உடல் நீங்கிச் செல்லும் காலத்தில் நரகம் என்னும் தரும் துயருள் ஆழ்ந்தமுன்னம், சுற்றத்தினரும் ஏளனம் செய்யும் தன்மையில் துன்பத்தை அடைவதன் முன்னம், முருகப் பெருமானே! ஆறுமுகக் கடவுளே! சிறியேனுக்குத் தகுதியில்லையாயினும், குருமூர்த்தி சகிதமாக, நீரே வந்து உபநிடதங்களின் உண்மைகளை உபதேசித்து உய்விப்பீராக.

காரைநகர் களபூமி திக்கரையில் வீற்றிருக்கும், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமானே சிவக் கடலில் சேரவும், சிவானந்தப் பெருவாழ்வையும் அடியேற்கு திருவருள் புரிவீராக.

எங்கும் நிறைந்த உமது இக,பர,சுப போகங்களைத் தரும் திருவடியைத் தமிழினால் பாடவும், அன்பர்கள் மகிழவும், உடல் அவமே அழியாமல். எழும்போது வேலும் மயிலும் என்பேன் எழுந்தே மகிழ்ந்து தொழும் போதும் வேலும் மயிலும் என்பேன் தொழுதே உருகி அழும்போதும் வேலும் மயிலும் என்பேன் அடியேன் உடலம் விழும்போதும் வேலும் மயிலும் என்பேன் களபூமி திக்கரை முருகனே, கந்தனே, குமரனே, ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று ஓம் சரவண பவ ஓம் சண்முகா சரணம் ஓம் நமசிவாய.



**க.கு.க.சிவபாலன்**
**அகில இலங்கை திருமுறை மன்றம்,**
**திக்கரை முருகன் ஆலயம்,**
**ஆறாம் திருவிழா .**

(C-9707)

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2020- 15.07.2020



சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் அஷ்டமத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். புதன், வக்கிரம் பெற்று சூரியன் மற்றும் ராகுவோடு இணைந்து தன் சொந்த வீடான மிதுனத்தில் இருக்கிறார். மேலும் சனி, குரு ஆகியோரும் வக்கிர இயக்கத்தில் உள்ளனர். இந்த நான்கு கிரகங்களின் வக்கிர இயக்கத்தில் குரு தவிர மற்ற மூன்று கிரகங்களின் வக்கிரமும் உங்களுக்கு நல்லதல்ல.

மீன - செவ்வாய் சஞ்சாரம்

செவ்வாய், ஜூன் 20 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பப் பிரச்சினை அதிகரிக்கலாம். வழக்குகள் தேடி வரலாம். உடன்பிறப்புகளே எதிரியாகும் சூழ்நிலை உண்டு. பொதுவாக போராட்டங்கள் அதிகரிக்கும் இந்த மாதத்தில், சீரான வாழ்வு அமைய செந்தில்நாதனுக்குரிய சண்முக கவசத்தை இல்லத்தில் தினமும் பாராயணம் செய்யுங்கள். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும்.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

ஜூன் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்குப் புதன் வருகிறார். வக்கிர இயக்கத்தில் வரும் புதன், அக்கறை செலுத்தாத காரியத்தில் கூட ஆதாயத்தைத் தருவார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. தொழிலில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி யாகும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறலாம். ஜூலை 4 ஆம் திகதி, புதன் மிதுனத்திற்குச் செல்கிறார். இக்காலம் இனிய காலமாகும். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் பெற்றோர்களின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்ப டுவர். ஆரோக்கியத் தொல்லை அகலும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத் துக்கள் உங்களுக்கு சாதகமாக அமைய லாம். பிள்ளைகளின் மேற்படிப்பு




சிறப்பாக அமைய அனுபவமிக்கவர்களின் ஆலோ சனை கைகொடுக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு ஏற்படும்.

தனுசு - குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்று சஞ்சரித்த குரு, ஜூலை 8 ஆம் திகதி தனுசு இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். தனுசு இராசி குருவிற்கு சொந்த வீடாகும். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. எனவே திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். அரசு வழியிலும் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் பலன் உண்டு. கட்டுமானப் பணிகளில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். இந்த மாதம் பிரதோச நேரத்தில் இல்லத்து பூஜையறையில் நந்தி பதிகம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வக்கிரமடைந்து சஞ்சரிக்கும் கிரகங்களின் ஆதிக்கத்தால், வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும். மாதத்தின் பிற்பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு இலாகா மாற்றம் வரலாம்.






சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் வக்கிரம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கிறார். தன பஞ்சமாதிபதியான குரு, மகரத்தில் இருந்து சுக்கிரனைப் பார்க்கிறார். புத-ஆதித்ய யோகத்தோடு தொடங்கும் இந்த மாதத்தில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

மீன- செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய், ஜூன் 20 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்கிறார். ஜீவன ஸ்தானத்திற்கு அதிபதியானவர் செவ்வாய் என்பதால், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், கல்யாண வாய்ப்புகள், உத்தியோக முயற்சிகளில் நற்பலன்கள் கிடைக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு திருப்தி தரும். துரித கதியில் முன்னேற்றம் காண்பீர்கள். மாற்று வேலை தேடுவதில் மனதை செலுத்தியவர்களுக்கு நல்ல வேலை அமையும். வாகனச் செலவு உண்டு. கட்டுமானப் பணிகளிலும் கவனம் செலுத்துவீர்கள்.

ரிஷப, மிதுன புதன் சஞ்சாரங்கள்

உங்கள் இராசிக்கு அஷ்டம இலாபாதிபதியான புதன், ஜூன் 20 ஆம் திகதி வக்கிரம் பெற்று ரிஷபத்தில் உள்ள சுக்கிரனோடு இணைகிறார். இந்த புத-சுக்கிர யோகத்தின் விளைவாக பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறத் தேவையான நிதியுதவி கிடைக்கும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவிற்கு வரும். கடந்த மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது கடகடவென நடைபெறத் தொடங்கும். அரசு வழியிலும் அனுகூலம் கிடைக்கும். ஜூலை 4 ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. எனவே வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். மனதைக் குழப்பிக்கொண்டி ருந்த பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். நாணயத்தைக் காப்பாற்று வீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் நட்பால் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் சூடுபிடிக்கும்.


ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

தனுசு - குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மரகத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி அதன் சொந்த வீடான தனுசு இராசிக்கு வருகிறார். உங்கள் இராசியைப் பொறுத்த வரை தனாதிபதி குரு, தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். தடைப்பட்ட காரி யங்கள் தானாக நடைபெறும். வீட்டை சீரமை ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். தேகநலன் சீராகும். உத்தியோகத்திற்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். இம்மாதம் இல்லத்துப் பூஜையறையில் அபிராமி அந்தாதி பாடி அபிராமி அம்மனை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் சுக்கிரப் பார்வை இருப்பதால் சுகங்களும் சந்தோசங்களும் கூடும். முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்பால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. சனிக்கிழமை அனுமன் கவசம் பாடி வழிபட்டால் ஆனந்தம் அதிகரிக்கும்.



சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் குரு வலிமை இழந்து வக்கிரம் பெற்றிருக்கிறார். உங்கள் இராசியிலேயே சனியும் வக்கிரம் பெற்று கேதுவோடு இணைந்திருக்கிறார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் தன்னம்பிக்கையும் தைரியமும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ராகு - கேதுக்களின் ஆதிக்கத்தால் ஆரோக்கியத் தொல்லை உண்டு.

மீன- செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 20 ஆம் திகதி, செவ்வாய் மீன இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம, விரயாதிபதியான செவ்வாய் 4 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. இடம், பூமி வாங்கியதில் பிரச்சினைகள் ஏற்படலாம். எதிர்பாராத வகையில் சில விரயங்கள் உருவாகும். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகள் வீடு தேடி வரலாம். எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

ஜூன் 20 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு எதிர்பார்த்த சம்பளத்தோடு கூடிய வேலை அமையலாம். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல தகவல்கள் கிடைக்கும். ஜூலை 4 ஆம் திகதி மிதுன புதனின் சஞ்சாரத்தால் சில மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரலாம். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். கூட்டுத் தொழில்புரிவோருக்கு மாற்றங்கள் ஏற்படலாம். அனுபவமிக்கவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கரைந்த சேமிப்புகளை




ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும்.

தனுசு - குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி அதன் சொந்த வீடான உங்கள் இராசிக்கு வருகிறார். இக்காலம் உங்களுக்கு ஓர் இனிய காலமாகும். இராசிநாதன் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். வருவாய் அதிகரிக்கும் வழியைக் கண்டு கொள்வீர்கள். உத்தியோகத்தில் தற்காலிக பணியாற்றுபவர்கள் நிரந்தரப் பணியாளராக மாற்றப்படலாம். குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும். உடல்நலம் சீராகும். இதுவரை தாமதப்பட்ட காரியம் தடையின்றி நடைபெறும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபடுங்கள்.


பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

ஜென்மச் சனி மற்றும் ஜென்ம கேதுவின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. நினைத்தது நிறைவேறுவதில் தடை ஏற்படலாம். பற்றாக்குறை அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டிய நேரம் இது. பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றங்களும் சகபணியாளர்களால் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

(தொடரும்)




# செயலை தொடங்கும் முன் யோசி




ஒரு நரி கிணற்றின் பக்கமாக நடந்து சென்றது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த நரி கிணற்றினுள் விழுந்தது. அது தன்னால் முடிந்த வரை வெளியே வர முயற்சித்தது. அதனால் வெளியே வர முடியவில்லை. அந்த நேரத்தில் மிகவும் தாகமாக இருந்த ஆடு கிணற்றின் வழியாக செல்லும் போது நரியைப் பார்த்து, அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் எனக் கேட்டது.

தந்திரமான நரி, தானே கிணற்றுக்குள் குதித்ததாக பதிலளித்தது. இங்கே நான் மிகவும் இதமாக இருக்கிறேன். நீ இனிப்பு மற்றும் குளிர்ந்த நீரை குடிக்க விரும்பினால், இங்கே வந்து அந்த இன்பத்தை அனுபவித்து பார் என்றது.


விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் ஆடும் கிணற்றினுள் குதித்தது. நரி ஆட்டின் முதுகின் மீது குதித்து கிணற்றை விட்டு வெளியே வந்தது. நரி ஆட்டைப் பார்த்து சிரித்துக் கொண்டே அதன் வழியில் சென்றது. ஆடு தனது முடிவை எண்ணி வருந்தியது.

**நீதி: ஆழம் தெரியாமல் காலை விடாதே.**

## வரைந்து பழகுவோம்



## உருவில் உள்ள 4 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





## பழமொழிகள்

- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அடக்கமே பெண்ணுக்கு அழகு.
- அண்ணன் எப்போ சாவான் திண்ணை எப்போ காலியாகும்.
- அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
- அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

# அனுமதியின்றி மருந்துகளின் விலைகளை அதிகரிக்கும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

**அனுமதியின்றி மருந்துகளின் விலைகளை அதிகரிக்கும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை எச்சரித்துள்ளது.**



இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், அதிக விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியின்றி மருந்துகளின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கும் சட்டபூர்வ அதிகாரம் வழங்கப்படவில்லை.

எனவே இதனை மீறி செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் ஒளடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)




## குணமடைந்தோர் 1,342

(கொழும்பு)

நாட்டில் நேற்றையதினம் மேலும் 55 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை ஆயிரத்து 342 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் ஆயிரத்து 889 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 536 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேசிய புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் மீது அவதூறு; ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

**நாட்டின் தேசிய புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலி சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் இயக்குநர் ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.**

மேஜர் ஜெனரல் சுரேஸ் சால்லே, தனது சட்டத்தரணி ஊடாக இவ்விடயம் தொடர்பாக ஜஸ்மின் சூக்காவிற்கும் அவரது அமைப்பிற்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறிப்பிட்ட கடிதம் தொடர்பாக புலனாய்வு அதிகாரியின் சட்டத்தரணி பசன் வீரசிங்க தெரிவித்துள்ளதாவது, "மேஜர் ஜெனரல் சாலிக்கு எதிராக பல்வேறு அவதூறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளீர்கள்.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள அவதூறு குற்றச்சாட்டுகள் காரணமாக உள்நோக்கம் கொண்ட சக்திகள் புலனாய்வு பிரிவின் அதிகாரிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும்சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் இலங்கை குறித்த இணையத்தளம் மூலம் ஜஸ்மின் சூக்கா வெளியிட்ட அறிக்கையால், புலனாய்வு அதிகாரியின் குணாதியசத்திற்கும் கௌரவத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, ஜஸ்மின் சூக்கா எதிர்காலத்தில் அவதூறு கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும். இதனை ஏற்றுக்கொள்ளாவிடின் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி ஏற்படும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## வவுனியா-கொழும்பு சொகுசு பேருந்து சேவை மீள ஆரம்பம்

(குருமன்காடு)

கொவிட்- 19 தாக்கத்தையடுத்து கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனையடுத்து வவுனியாவிற்கும், கொழும்புக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டது. தற்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ள நிலையில் பயணிகளின் நன்மை கருதி வவுனியா - கொழும்பு இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசு பேருந்தில்பயணிப்பவர்களின் உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அரசாங்க அறிவுறுத்தலுக்கு அமைவாகவே சேவைகள் இடம் பெறும் என அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (2-5-250)



படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கை முச்சக்கர வண்டி சேவையாளர் சங்கத்தலைவர் சுனில் ஜயவர்தனவிற்கு வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. (படம்: நெளுக்குளம் செய்தியாளர்)

## சட்டவிரோத ஒன்றுகூடல் 24பேர் பொலிஸாரால் கைது

(கண்டாவளை)


கிளிநொச்சி அக்கரயான் குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் ஒன்றுகூடப்படுகின்றமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மேற்படி 14 பேரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையும் ஏனைய பத்துப் பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-5-315)

## பேசாலையில் புதையல் தோண்டிய ஆறு பேர் கைது,நவீன கருவி மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேசாலை யூட்ஸ் வீதி பற்றைக் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 6 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர் கள் புதையல் எடுக்கப் பயன்படுத்திய நவீன கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

பேசாலை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் குறித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமாக புதையல் தோண்டும் நடவடிக்கை யில் ஈடுபட்ட அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 4 நபர்களும் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா மற்றும் வசந்தபுரம் பகுதி யைச் சேர்ந்த 2 நபர் களும் பேசாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு, அவர்களிடம் இருந்து நவீன கருவி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட குறித்த 6 நபர்களும் பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போது குறித்த 6 சந் தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-5-285)


அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமானத்துக்குரிய வலம்புரியில்



பேராசிரியர் முருகர் குணசிங்கம்

எழுதும்

"புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு"

விரைவில் வெளிவரும்

வாசிக்கத் தவறாதீர்கள்!

# லீசிங் நிறுவனங்களை தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் வலியுறுத்து

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியாக இயங்கும், சட்டபூர்வமற்ற நிறுவனங்களைத் தடை செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையால், 1948 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாநாட்டில், அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமை உறுதி செய்யப்பட்டது. ஆனால், இன்று இந்த உரிமை கேள்விக்குறியாகியுள்ளது. இதனை அகில இலங்கை ஆட்டோ சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தனவின் படுகொலை வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளது. மத்திய வங்கி தனது வேலையை சரியாகத் தான் செய்கிறதா? எனும் கேள்வி இன்று எழுந்துள்ளது. பொலிஸ், நீதிமன்றங்கள் என அனைத்தும் செயலிழந்துள்ளன.

இன்று நாட்டில் பாதாளக் குழுவினரின் நடமாட்டம்தான் அதிகரித்துள்ளது. இதுதான் நாட்டில் நடக்கிறது. மக்களின் உரிமையை மீறி எவராலும் அரசியல் மேற்கொள்ள முடியாது. நான் வடக்கின் ஆளுநராக இருக்கும்போது, 63 லீசிங் நிறுவனங்களைத் தடை செய்திருந்தேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், இளைஞர்கள், பெண்



தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இந்த லீசிங் நிறுவனங்களால், நூற்றுக்கு 60 வீத அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டது. இதனால், மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்பட்டது.

இதனால், நான் மத்திய வங்கி ஆளுநருடன் அப்போது கலந்துரையாடி இந்த நிறுவனங்களைத் தடை செய்தேன். இவ்வாறு இப்போதும் மேற்கொள்ள முடியும். சட்டரீதியற்ற ஒரு லீசிங் நிறுவனத்தை தடை செய்யும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உள்ளது.

எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். இது அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஒரு நாட்டுக்குள் ஒரு சட்டம் தான் நடை முறையில் இருக்க முடியும் என வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார். (ஜ-8)

# கட்சிகள் தொடர்பில் ஆராயும் அரசு நாட்டின் ஜனநாயகம் கேள்விக்குறிக்குள்?

## ருவான் விஜேவர்த்தன அச்சம்

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வை பெற்றுக்கொடுக்காமல் அரசாங்கம் அரசியல் கட்சிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வரும் நிலையில், நாட்டின் ஜனநாயகம் பாரிய பிரச்சினைக்குள்ளாகி இருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி பிரதிச் செயலாளரும் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவான் விஜேவர்த்தன குற்றம் சாட்டினார்.

கம்பஹா மாவட்டம் பியகம தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக கொரோனா வைரஸ் தாக்கத்துடன் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்கு ஆளாகி இருக்கின்றனர். பலரது தொழில் வாய்ப்புக்கள் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. சுய தொழில் செய்து வந்தவர்கள் தங்களது தொழிலை தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஆனால் பல்வேறு வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்காமல் அரசியல் கட்சிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது.

கெரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டபோது பல்வேறு நிவாரண சலுகைகளை வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் அரசாங்கத்தின் எந்தவொரு சலுகையும் மக்களுக்கு கிடைக்கவில்லை. வாகன குத்தகைகளை வழங்குவதற்கு நிவாரணக் காலம் வழங்குவதாக தெரிவித்திருந்தது.

கடந்த மூன்று மாதங்களில் மக்களின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணம், வங்கிகளில் இருந்து பெற்றுக்கொண்ட கடன்களுக்கு நிவாரணம் வழங்குவதாக தெரிவித்திருந்தது. ஆனால் எதுவும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அதேபோன்று நாட்டுக்குள் போராட்டங்களை நடத்த முடியாத வகையில் அதற்கு தடைகளை ஏற்படுத்தி இருக்கின்றன. சட்டத்தை நிலைநாட்டும் போதும் ஒருசாராருக்கு ஒரு மாதிரியும் மற்றவர்களுக்கு வேறு மாதிரியுமே சட்டம் நிலைநாட்டப்படுகின்றது.

ஜனநாயகத்தை விரும்பும் யாரும் அரசாங்கத்தின் இந்த



நடவடிக்கையை அனுமதிப்பதில்லை.

எனவே எமது காலத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த மக்களின் ஜனநாயக உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் நாட்டின் ஜனநாயகத்துக்கு கேள்விக்குறி ஏற்படும் அபாயம் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வேட்பாளர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்-மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இதற்காக கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் மீறப்படமாட்டாது என குறிப்பிட்டு வேட்பாளர்கள் சட்ட வலுவுடைய ஆவணமொன்றில் கையெழுத்திட வேண்டும்.

அத்துடன் கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் சுமை சுகாதார அதிகாரிகள் மீது அரசாங்கத்தினால் சுமத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களும் சுகாதார தரப்பினரால் வழங்கப்படுவதோடு, போக்குவரத்து வசதிகளும் ஒழுங்கு செய்து தரப்பட வேண்டும். இதேவேளை, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-8)

# உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இன்று

(கொழும்பு)

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான முதல் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதற்கமைய இக்கூட்டம் ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் முதற் தடவையாக இன்று ஒன்றுகூடவுள்ளனர்.

இதன்படி இன்றைய கூட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் ஒத்திகை நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. அதேநேரம் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய தேர்தலை நடத்துவது குறித்து ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# தபால்மூல மருந்து விநியோகப் பணி தபால்மா அதிபரால் இடைநிறுத்தம்

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை (கிளினிக்) மருந்து மற்றும் அரச ஒசுசல மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மருந்து வகைகளின் உரிமையாளர்களுக்கு தபால் திணைக்கள அலுவலகப் பணியாளர் மூலம் விநியோகிக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன நேற்று அறிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி செயலணிக் குழுவின் கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை (கிளினிக்) மருந்து மற்றும் அரச ஒசுசலவின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மருந்து வகைகளின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் பணி தபால் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பணியை எமது பணியாளர் சபையால் செயற்திறனுடனும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றப்பட்டதுடன் அதற்காக அர்ப்பணித்த தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர் சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரையில் அரசாங்கத்தால் கொரோனாத் தொற்று பரவுவதை கட்டுப்படுத்தி பொது மக்களின் வாழ்க்கை நிலை வழமை நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.


இதற்கமைவாக தபால் திணைக்களத்தின் வழமையான கடமைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள தேர்தல் பணிகளுக்காக முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதால் தொடர்ந்தும் அரச வைத்தியசாலைகளில் கிளினிக் மருந்து மற்றும் அரச ஒசுசல மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மருந்து வகைகளை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தபால் திணைக்களப் பணியாளர் சபையினருக்கு சிரமம் என்பதால் இந்த நடவடிக்கையை சுகாதாரப் பிரிவின் உடன்பாட்டிற்கு அமைய நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த மருந்து வகைகளை விநியோகிக்கும் பணியை எதிர்காலத்திலும் மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவு மற்றும் நுகர்வோரான பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை வகுத்து எதிர்காலத்தில் அது தொடர்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தபால்மா அதிபர் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-8)

# கேகாலையில் பாரிய தீ விபத்து 200 வர்த்தக நிலையங்கள் தீக்கிரை!

(கொழும்பு)

**கேகாலை மத்திய வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட திடீர் தீப்பரவலால் 200 வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன.**





கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேகாலை வர்த்தக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கேகாலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விரைந்து செயற்பட்ட பொலிஸார் தீயணைக்கும் பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கண்டி மற்றும் மாவனெல்ல தீயணைப்புப் படையினர் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த நிலையில் சுமார் 4 மணித்தியால போராட்டங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீப்பரவலின் காரணமாக வர்த்தக மத்திய நிலையத்தில் சுமார். 200 வர்த்தக நிலையங்கள் வரை முற்றுமுழுதாக தீக்கிரையாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

மின்கசிவின் காரணமாகவே தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என கேகாலை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-4)

# சிறுத்தைகளைப் பாதுகாக்க விசேட திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஸ்ரீபாத அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் சிறுத்தைகளைப் பாதுகாக்கும் திட்டமொன்று வனவிலங்குத் துறையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நல்லதண்ணி மற்றும் லக்ஷபான தேயிலைத் தொழிற்சாலைக்கு உட்பட்ட பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நிலையில் குறித்த பகுதியில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்களில் வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள பொறிகளை அகற்றுவதற்கு தோட்ட நிர்வாகத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

இதன்படி, தேயிலைத் தோட்டங்களில் சுற்றித்திரியும் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமான முறையில் பொறிகளை பயன்படுத்துவதை தவிர்ப்பதே இதன் நோக்கமென வனவிலங்குத் துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை தேயிலைத் தோட்டங்களில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்படும் பொறிகளில் சிக்கி அண்மைக்காலமாக நாட்டில் அருகிவரும் சில உயிரினங்கள் உயிரிழந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேசா விரதம்

“நாங்கள். இரண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக் கொள்வது இல்லை சேர்!” என்று ஒருத்தர் சொல்கிறார் என்றால் என்ன அர்த்தம்? அவர்களுக்குள்ளே ஏதோ மனஸ்தாபம் என்று அர்த்தம்.

இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிக்கவில்லை என்றால் பேசாமல் இருந்திருக்கின்றோம். கொஞ்சநாள் கழித்து இரண்டு பேரும் சமாதானம் ஆகிவிட்டால் மறுபடியும் பேசிக் கொள்ள ஆரம்பிக்கின்றோம்.

கோபம் வந்தால் உடனே ஒருத்தருக்கொருத்தர் அடித்துக் கொள்வதைவிட இப்படி பேசாமல் இருந்துவிடுவது எவ்வளவோ நல்லது.

இப்படி ஒரு வழி இருக்கிறதனாலேதான் இன்றைக்கு எவ்வளவோ குடும்பங்கள் ஒரு மாதிரியாக சமாளித்துப் போய்க் கொண்டு இருக்கின்றது. கோபத்திற்கு அடிதடிதான் வழி என்றால் இன்று பலபேர் வைத்தியசாலையில் தான் படுத்திருக்க வேண்டும்.

கணவன்-மனைவிக்குள்ளே கோபம் வந்துவிட்டால் உடனே ஒருத்தருக்கொருத்தர் பேசிக்கொள்ளாமல் இருப்பது சகஜம். இது எங்களுடைய ஊரில் மட்டும் தான் என்று நினைக்காதீர்கள். உலகம் முழுவதும் உண்டு. நாள் கணக்கிலே பேசாமல் இருப்பதையும் நாம் பார்த்திருக்கின்றோம். வருடக் கணக்கில் பேசாமல் இருப்பதை சில இடங்களில் பார்த்திருக்கின் றோம்.

ஐம்பது வருடமாக ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக் கொள்ளாமல் இருந்த பொன்விழா தம்பதியர் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? புடாபெஸ்ட் நகரத்திலே ஒரு தம்பதியர் (ஹெல்லி தம்பதியர்).

1889 இலே அவர்களுக்குள்ளே ஏதோ ஒரு சின்ன சச்சரவு. உடனே பேசுவதை நிறுத்திவிட்டார்களாம். யார் முதலிலே பேசுவது என்பது அவர்களுக்குள்ளே போட்டி. இப்படி 50 வருடம் ஓடிப் போய்விட்டது. பேச்சைத்தான் நிறுத்தி விட்டார்களே தவிர ஒருத்தரை ஒருத்தர் பிரிந்து போய்விடவில்லை. இல்லற வாழ்க்கையிலே எந்த மாற்றமும் இல்லைஇ ஏழு குழந்தைகளை வேறு பெற்றுக் கொண்டார்களாம். ஆனால் பேசிக் கொள்வது இல்லை. இது எப்படி இருக்கு?

புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ. அவருடைய மகள் அடெலி. இந்தப் பெண் 65 வருடமாக யாருடனும் பேசவில்லையாம். என்ன காரணம் தெரியுமா? அந்தப் பெண் தன்னுடைய 20 ஆவது வயதிலே ஆங்கில மத குரு ஒருத்தருடைய பிள்ளையை (ஆல்ஃப்ரெட்) பின்ஸென் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டார்களாம்.

கொஞ்ச நாளிலே அந்தப் பையனுக்கு இவளைப் பிடிக்கவில்லை. வெறுத்து ஒதுக்க ஆரம்பித்தான். உடனே இந்தப் பெண் மிகவும் நொந்து போய் தன் அப்பாவிடம் வந்து சேர்ந்தாள். தான் சாகிற வரைக்கும் யாருடனும் பேசுவதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டாளாம். அதே மாதிரி...

1915 இலே அவள் சாகிற வரைக்கும் அதாவது 65 வருடம் அந்தப் பெண் யாருடனும் பேசவே இல்லையாம்!

இது மிகவும் ஆச்சரியாக இருக்கின்றது இல்லையா...?

அமெரிக்காவிலே டென்வர் நகரத்திலே ஹிராம் கில்கோர்ன்னு ஒருத்தர். ஒரு நாள் வேலையிலேயிருந்து மிகவும் களைத்துப் போய் வீட்டுக்கு வந்திருக்கின்றார்.

வீட்டுக்கார அம்மா சாப்பாடு சரியாக தயார் செய்து வைக்கலையாம். அது மட்டுமில்லை அந்த நேரம் அந்த அம்மா துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாராம். அவ்வளவு தான்... இவருக்குக் கோபம் வந்துவிட்டது. பேச்சை நிறுத்திக் கொண்டார். எவ்வளவு காலமாகத் தெரியுமா? 21 வருடம். ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக்கவே இல்லை. இது மாதிரி காரணத்துக்கெல்லாம் நம்ம ஊரிலே பேச்சை நிறுத்துவது என்று ஆரம்பித்தால்... அவ்வளவுதான். பல வீடுகளுக்கு பாஷையே தேவைப்படாமல் போய்விடும்.

வாஸ் ஏஞ்செல்ஸ்லே எவாவில்மர்ன்னு ஒருத்தர். தன் மனைவிக்கு திருமண ஆண்டு விழா பரிசு ஒன்றும் வாங்கிக் கொடுக்கலையாம். 9 வருடம் பேச்சு கட்.

பெல்ஃபாஸ்ட் நகரத்திலே ஜான்டிம் என்று ஒருத்தர். 14 வருடம் தன் மனைவியிடம் பேசவில்லையாம்! ஒரே ஒரு தடவை ஏதோ ஒரு வார்த்தை பேசினாராம். அவ்வளவு தான்.

எங்கள் ஊர் ஆள் ஒருத்தர் அழுது கொண்டிருந்தார். “ஏன் அழுகின்றீர்கள்?” என்று கேட்டேன். “என் மனைவி 10 வருடம் என் கூட பேசமாட்டேன் என்று சபதம் போட்டுவிட்டாள் சேர்” என்றார். “அதற்குப் போய் யாராவது அழுவார்களா?” என்றேன். “சேர். நான் அதற்காக அழவில்லை. அந்த பத்து வருடம் இன்றையோடு முடிகிறது சேர்” என்று சொல்லி விட்டு மறுபடியும் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

துன்பத்தைப் பற்றிச் சிந்திக்காமல் அதை போக்குவதற்கான முயற்சியில் மனிதன் ஈடுபட வேண்டும். மனதில் தெளிவு இருப்பவனிடம் துன்பம் நிலைத்திருப்பதில்லை.
– சுவாமி சித்பவானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி செயலணி என்பது தோலிருக்க சுளை விழுங்கவா?

நன்றாகப் பழுத்த தேங்காய் தென்னையில் இருக்கக் குரும்பை நிலத்தில் வீழ்வது இயற்கையின் நியதி.

எனினும் இந்தத் தத்துவத்தை உணராதவர்கள் மாபாவத்தைச் செய்து துன்பத்தில் வீழ்ந்து துவளுகின்றனர்.

ஆம், இலங்கை நாடு இயற்கையின் வனப்பால் படைக்கப்பட்டது.

ஆத்மிக நம்பிக்கையோடு ஆதிக்குடிகள் வாழ்ந்ததான வரலாற்றைக் கொண்ட இந்தப் புண்ணிய பூமியில் இன வக்கிரத்தால் நடந்த கொலைகள் கொஞ்சமல்ல.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று இரு கரம் நீட்டிய மக்களைக் கொன்று குவித்த மாபாவம் நடந்த பூமியாக இலங்கைத் தீவு மாறியது.

பேரினவாத சிந்தனை மேலெழுந்து, அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்தபோது யாரங்கே! நிறுத்துங்கள் யுத்தத்தை என்று கூறுவதற்கு ஒரு பௌத்த துறவி முன்வரவில்லை எனும்போது இன்றைய பௌத்த ஆன்மிகம் எதைச் செய்கிறது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் கூற முடியும். பகலும் இரவும் இந்தப் பூமியின் இருபக்கங்கள்.

ஓடம் வண்டியிலும் வண்டி ஓடத்திலும் பயணிக்க வேண்டியதாகவே பூமியின் தோற்றம் அமைந்துள்ளது.

எனினும் இந்த உண்மையை உணராதவர்கள் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்கின்றனர்.

தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று வரலாறு கூறுகின்றனர்.

பெரும்பான்மை இனம் என்ற ஒரே காரணத்தால், சிறுபான்மை இன மக்களை எதுவும் செய்யலாம் என்பதே இங்கு நீதியாயிற்று.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிப்பதற்காகக் காலத்துக்குக் காலம் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் என்பதை வெட்டிச் சரிப்பதற்காகத் தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளை அழிப்பதும் அவற்றைக் கபளீகரம் செய்வதுமே பேரினவாதத்தின் திட்டமாக உள்ளது.

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்ய முற்பட்டது முதல், முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் முயற்சியும் புத்த பிக்குவின் உடலை அங்கு தகனம் செய்தமையும் தமிழினத்தின் தொன்மைச் சான்றுகளை அழிக்கும் நோக்காகும்.

இதற்கு மேலாக இப்போது ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் தமிழர் தேசத்தின் தொல்லியல் சான்றுகள் கபளீகரம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன வெனில், இதுவே தோலிருக்கச் சுளை விழுங்கும் சூத்திரமாகும்.

# ஜனாதிபதி ஆணைக்குழு 17 பேருக்கு அழைப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 17 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்னாள் அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரட்ன மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் தவிர்த்து மேலும் 13 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி முன்னாள் கடற்படை தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி டளஸ் விக்கிரசிங்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, முன்னாள் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.ஏ.டி.குணவர்த்தன, துதினன் கொமாண்டர் டபிள்யூ.எச்.பீ.வீரசிங்க, ரியர் அட்மிரல் ஜே.ஜே. ரணசிங்க, ரியர் அட்மிரல் நிலந்த ஹீனடிகல, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, காலி துறைமுக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்துக டி சில்வா, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் அளுத்கே செனரத் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த ரத்நாயக்க, வசந்த நவரத்ன பண்டார, அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக பண்டார ஆகியோருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

## விமான நிலையத்தின் புறப்படும் பகுதி பொதுமக்களுக்காக மீண்டும் திறப்பு

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படல் கூடம் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளது என விமான நிலையம் அறிவித்துள்ளது.

இது குறித்து முகப்புத்தகத்தில் உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன் விமானப் பயணி ஒருவருடன் 3 பேர் வழியனுப்பல் கூடத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புறப்படல் கூடத்திற்கு செல்பவர்கள் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை குறிப்பாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி போன்றவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் ஆட்டோவும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக் குள்ளானது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. இவ்விபத்தில் ஆட்டோ சேதத்திற்குள்ளானது. (2-5-18)

## உ/தரப் பரீட்சை திகதி தொடர்பில் மீண்டும் ஆராயப்படவுள்ளது

### கல்வி அமைச்சு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை நடைபெறும் தினம் தொடர்பில் மீள ஆராயவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

அகுரஸ்ஸ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சை மாணவர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பல தரப்புகளிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பில் மீண்டும் ஆராயப்படவுள்ளது என கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த உயர்தரப் பரீட்சைகள் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் 3 மாதங்களில் 550 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு கடந்த 5 மாதங்களில் 800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 550 முறைப்பாடுகள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்தில் மின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பானது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவானது இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதன்படி, தொடர்ந்து மின் கட்டணங்களில் சிக்கல் நிலை ஏற்படுமாயின் இலங்கை மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் தெரிவிக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நம்மைத் தட்டியெழுப்பி, அறிவு புகட்டி, மகிழ்ச்சியைக் கொடுத்து, வசதிகளை அளித்து, நம்பிக்கையையும் ஊட்டி, தங்கள் இதயத்தைத் திறந்து காட்டி, நம்முடைய இதயங்களோடு இன்ப உரை நிகழ்த்துவன புத்தகங்களே. -கிங்ஸ்லி

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எல்லையற்ற ஆற்றல்



கடலில் மலையளவு பெரிய அலைகளும் சிறிய அலைகளும் இன்னும் சிறியனவும் சிறு சிறு குமிழிகளும் உள்ளன. ஆனால் இவை அனைத்திற்கும் ஆதாரமாக எல்லையற்ற கடலுள்ளது. ஒரு முனையில் சிறு குமிழி, மற்றொரு முனையில் பெரிய அலை என்று அவை கடலுடன் இணைக்கப்பட்டுள்ளன.

எனவே ஒருவன் மிகப் பெரியவனாக இருக்கலாம். மற்றொருவன் சிறு குமிழியாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் வாழும் உயிர்கள் ஒவ்வொன்றின் பொதுப் பிறப்புரிமையாகிய அந்த எல்லையற்ற ஆற்றல்களுடன் பிணைக்கப்பட்டுள்ளனர். எங்கெங்கு உயிர் உள்ளதோ அங்கு அவற்றின் பின்னால் அளப்பரிய சக்திக் களஞ்சியம் உள்ளது.

ஊனக்கண்ணிற்குத் தெரியாத மிகமிக நுண்ணிய அமீபாவாக தனது பயணத்தைத் தொடங்குகின்ற உயிர், அந்த எல்லையற்ற ஆற்றல் களஞ்சியத்திலிருந்து தொடர்ந்து சக்தியை எடுத்தவாறு தாவரமாக, விலங்காக, மனிதனாக மெதுவாகப் படிப்படியாக உருமாறி இறுதியில் கடவுளாகவும் ஆகிறது. இந்தப் பரிமாணத்திற்கு பலகோடி யுகங்கள் ஆகலாம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மருதனார்மடம் சந்தியிலிருந்து உடுவில் மானிப்பாய் வீதி, உடுவில், சங்குவேலி, புதுமடம், மல்வம், டச்சு வீதி உடுவில், ஆர்க் வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி, கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஓலைத்தொடுவாய், முள்ளிப்பளம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைதொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## கொரோனாவின் கோரத் தாண்டவம் அடங்காத பிரேஸிலில்

# இறந்தவர்களைப் புதைக்க இடமில்லை கல்லறைகளைத் தோண்டும் அவலம்





(நியோடி ஜெனிரே)

பிரேஸிலில் கொரோனா வைரஸால் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் உடல்களைப் புதைக்க இடமில்லாமல் முக்கிய நகரான சாபோலோவாவில் உடல்களைப் புதைக்க பழைய கல்லறைகளைத் தோண்டி அப்புறப்படுத்தி, உடல்களை அடக்கம் செய்யும் அவலத்துக்கு சென்றுள்ளது.

உலகளவில் கொரோனாவுக்கு உயிரிழப்பிலும் தொற்றிலும் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பது அமெரிக்காதான். அதற்கு அடுத்த இடத்தில் தற்போது பிரேஸில் உள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையில் 2ஆவது இடத்தில் இருந்த பிரேஸில், தற்போது உயிரிழப்பிலும் பிரிட்டனைப் பின்னுக்குத் தள்ளி 2வது இடத்துக்கு நகர்ந்துள்ளது.

பிரேஸிலில் கொரோனா வைரஸால் ஒட்டுமொத்தமாக 8 இலட்சத்து 29 ஆயிரத்து 902 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 41 ஆயிரத்து 901 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஒரு வாரமாக நாள்தோறும் அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்து வருகின்றனர்.

பிரேஸில் நாட்டின் மிகப் பெரிய மெட்ரோ நகரான சாபோலாவோவில் கொரோனா உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்து நாள்தோறும் நூற்றுக்கணக்கில் கொத்துக்கொத்தாக மக்கள் மடிகிறார்கள்.

இதனால் உயிரிழந்தவர்களைப் புதைக்க கல்லறைகளில் இடமில்லாமல் நகர நிர்வாகம் திக்குமுக்காடி வருகிறது.

இதனால் வேறு வழியின்றி மிகப் பெரிய கல்லறையான விலாபோர்மோசா கல்லறையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்டவர்களின் உடல்களைத் தோண்டி எடுத்துவிட்டு அந்த இடத்தில் கொரோனாவில் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்து வருகின்றனர். (2-5)

# மகாநதி ஆற்றில் மூழ்கியிருந்த 500 ஆண்டுகள் பழைமையான கோயில்


## வரலாற்று ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

(ஒரிஸா)

ஒரிஸா மகாநதி ஆற்றில் மூழ்கியிருந்த சுமார் 500 ஆண்டுகள் பழைமையான கோயிலை வ்ரலாற்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சுமார் 60 அடி உயரம் கொண்ட இக் கோயில் 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என இந்திய கலை, கலாசார பாரம்பரிய அறக்கட்டளையின் திட்ட ஒருங்கிணைப்பாளர் அனில் தீர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மகாநதி பள்ளத்தாக்கு பகுதிகளில் உள்ள பாரம்பரிய சின்னங்களை ஆவணப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளதாகவும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டாக் மாவட்டம், பத்மாவதி பகுதியிலுள்ள பைதேஷ்வர் கிராமத்தின் அருகே மகாநதி ஆற்றில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி கோயில் கண்டுப்பிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.





60அடி உயரம் கொண்ட இக்கோயிலின் கட்ட பாணி மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது அது 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக தெரிகிறது.

கோயிலின் பிரதான கடவுள் கோபிநாதர் ஆவர். பழைமை வாய்ந்த இக்கோயிலை பாதுகாப்பாக வேறு இடத்துக்கு மாற்றி மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக்கோரி இந்திய தொல்லியல் துறையை அணுகவுள்ளோம். அதற்கான தொழில்நுட்பங்கள் இந்திய தொல்லியல் துறையிடம் உள்ளது.

மகாநதி பள்ளத்தாக்கு பகுதியில் இதுவரை 65 பழைமையான கோயில்கள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## சிலியில் கொரோனா தீவிரம் சுகாதாரத்துறை அமைச்சர் இராஜினாமா



(சாண்டியாகோ)

கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சிலி நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் ஜெய்மி மனாலிக் தனது பதவியை திடீரென இராஜினாமா செய்தார்.

சீனாவில் தோன்றிய உயிர் கொல்லி கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி ஆட்டிப்படைத்து வருகிறது. தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் கொரோனா வைரஸ் தாக்கம் மிக தீவிரமாக உள்ளது. அங்கு ஒரு இலட்சத்து 67 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அந்த நாட்டில் புதிதாக வைர்ஸ் தொற்றுக்கு ஆளாகுபவர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஜெய்மி மனாலிக் கொரோனா விவகாரத்தை சரியாகக் கையாளாததே இதற்குக் காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வந்தன. இந்நிலையில் சுகாதாரத்துறை அமைச்சர் ஜெய்மி மனாலிக் நேற்று முன்தினம் தனது பதவியை திடீரென இராஜினாமா செய்தார். (2-5)

# எந்தப் போரிலும் வெற்றி நமதே

## ட்ரம்ப் ஆக்ரோஷம்



(வோஷிங்டன்)

இனி எந்தப் போராக இருந்தாலும் அதில் வெற்றி தமக்கு மட்டுமே என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஒக்லஹாமாவில் உள்ள அமெரிக்க இராணுவப் பயிற்சி நிலையத்தில் அதிகாரிகளுக்கான பயிற்சி நிறைவு நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பயிற்சி நிறைவு செய்தவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நம் இராணுவத்தின் அடிப்படைக் கொள்கையை மீட்க உள்ளோம். வெளிநாடுகளில் அமைதி மற்றும் வளர்ச்சி ஏற்படுத்துவது அவர்களுடைய பணி அல்ல. நம் நாட்டை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதே இராணுவத்தின் முக்கிய நோக்கமாகும்.

முடிவே இல்லாமல் நடந்து வரும் போர்களை நிறுத்த உள்ளோம். அதற்கு பதிலாக நம்நாட்டை வலிமைப்படுத்துவதில் கவனம் செலுத்துவோம். எங்கேயோ தொலைவில் உள்ள, பெயர்கூட தெரியாத நாடுகளுக்கு நம் படைகளை அனுப்பி வந்தோம்.

அமெரிக்க இராணுவம் என்ன, உலக நாடுகளின் பொலிஸா அதேநேரத்தில், நம் எதிரிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கிறேன்.

அமெரிக்க மக்களுக்கு எதிராக எங்கு எந்த நடவடிக்கை நடந்தாலும் உடனடியாகச் செயற்படத் தயங்க மாட்டோம். இனி எந்தப் போராக இருந்தாலும் அதில் வெற்றி நமக்கு மட்டுமே. அமெரிக்க வரலாற்றிலேயே இராணுவத்துக்கு அதிக நிதியை ஒதுக்கியது நான் தான். இந்த உலகில் மிகவும் வலுவான இராணுவம் என்றால் அது அமெரிக்காவுடையது மட்டும் தான்.

ஒக்லஹாமாவில் உள்ள இந்த இடத்தில் தான், 1921 ஆம் ஆண்டு கறுப்பின மக்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்ற போர் நடந்தது.

அடிமைத்தனம் என்ற தீமையை அணைக்கும் போரில் நம் இராணுவத்தினர் சிறப்பாகச் செயற்பட்டதை எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது" என மேலும் தெரிவித்தார். (2-5)

# இலங்கையின் பூர்வீகக் குடிகள் சைவத்...

**கேள்வி** - நீங்கள் கொழும்பில் இருக்கும் போது பல வருடங்களாக சமய சமூக மற்றும் இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு பேசிவந்தீர்கள்.

தற்போது அரசியலில் இறங்கிய தால் அரசியல் காரணங்களுக் காக உங்கள் பேருக்குக் களங்கம் ஏற்படுத்திவருகின்றார்கள். உங் கள் சமய அறிவுப்படி அரசியல் அனுபவத்தின்படி தமிழ் மக் களுக்கு ஒருதீர்வு கிட்டுமா?

சில நாட்களுக்கு முன்பதான பத்திரிகையின்படி பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுக் கான தீர்வைத்தான் மட்டும்தான் தரமுடியும் என்று கூறியுள்ளார். அது அவரால் முடியாது. ஏன் என்றால் அவருக்குத் தமிழர்களின் பிரச் சினை என்னவென்றே தெரியாது. பின் எப்படி தமிழர்களின் பிரச் சினைக்குத் தானே தீர்வைத் தரப் போவதாக அறிவிப்பது? எந்த ஒரு சிங்கள அரசியல் வாதியாலும் தமிழர்களுக்கான தீர்வைத் தர முடியாது. அப்படி தருவதானால் அவர்கள் பின்வரும் உண்மை களை ஏற்கவேண்டியிருக்கும். அவர்களால் அவற்றை ஏற்கமுடி யாது. அவர்களின் அகந்தை, அறி யாமை போன்றவை அதற்கு இடம் கொடுக்காது.

அவையாவன.

1. இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் சைவத் தமிழரே. சரித்திரரீதியாக இதில் எந்தவித மயக்கமும் இல்லை.

2. அவர்கள் தொடர்ந்து இலங் கையின் மேற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளார்கள்.

3. மகாவம்சம் வரலாற்று நூல் அன்று. அது பௌத்தத்தை மாண் புறச் செய்ய எழுதப்பட்ட புனை கதை. அது பாளியில் எழுதப்பட்டது. அது எழுதப்பட்டபோது சிங்கள வர்களும் இருக்கவில்லை, சிங்கள மொழியும் இருக்கவில்லை.

4. சிங்கள மொழி ஒரு மொழியாக பரிணாமம் பெற்றது கி.பி.6ம் அல்லது 7ம் நூற்றாண்டி லேயே.

5. பிரிட்டிஷார் 1833ல் நாட்டை நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கென இராஜ்ஜியங்களை அமைத்து வடக்கு கிழக்கில் 3000 வருடங்களுக்குமேல் தொடர்ந்து குடியிருந்து வந்துள்ளார்கள். கிழக்கில் கண்டி அரசர்களுக்கு சிலசமயங்களில் திறைசெலுத் தினாலும் கிழக்கில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழரே.

6. இது வரையில் தமிழர்க்கு எதிராக நடந்து வந்திருப்பது இனப் படுகொலையே.

இவற்றை ஏற்காது எந்தச் சிங்களத் தலைவராலும் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வைத் தரமுடி யாது. வேண்டுமானால் இவ்வளவு தான் தரலாம் என்று தமது எச்சில் இலையில் உள்ள எலும்புகளை எமக்குத் தூக்கிப் போடலாம்.

தமிழர்கள் சிலர் அதனை ஏற் கச்சித்தமாக உள்ளார்கள். ஆனால் பெரும் பான்மைத் தமிழர்கள் தம் முடைய மாண்பையும் மதிப்பை யும் நெடிய இருப்பையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வையே ஏற்றுக் கொள்வார்கள்.

ஐரோப்பாவில் 100 வருடப் போர் நடந்தது. அயர்லாந்து மக்கள் பலவருடகாலம் போர் புரிந்து வந்துள்ளார்கள். அதேபோன்று தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறும் வரையில் போராடுவார்கள். தமிழர்கள் தமக்கிருக்கும் உண் மையான, நீதியான, நியாயமான உரித்துக்களை முன்வைத்தே தமது தீர்வுகளைக் கேட்கின்றனர். அதனை வழங்காது சிங்களத் தலை வர்கள் ஏமாற்றி வந்தால் 100 வரு டத்திற்கும் தொடர்ந்து போராட்டம் நடத்த தமிழ் மக்கள் உள்ளுறுதி கொண்டிருக்கின்றனர். கேப்பாப் பிலவு மக்களின் மன உறுதியை யும் விடாமுயற்சியையும் உலகம் அறியும். இன்று நாளை நாங்கள் போய்விடலாம். ஆனால் எமது வம்சத்தில் உதிப்பவர்கள் 100 வருடத்திற்குமேலும் போராட்டத்தை நடத்துவார்கள் - தமது நீதியான உரித்துக்கள் கிடைக்கும் வரை!

இதனை உணர்ந்து சிங்களத் தலைவர்கள் நியாயமான தீர் வொன்றை வெகு விரைவில் கொண்டுவந்து அதன் அடிப்படை யில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. காரணம் அவர் களுக்கு உலக நெருக்குதல்கள் கூடிக் கொண்டுவருகின்றன. பொரு ளாதாரம் சிதைந்து வருகின்றது. தமிழர்களுடன் ஒப்பந்தம் செய்யா விட்டால் தாம் இன்னொருநாட்டின் அடிமையாக நேரிடும் என்ற பயம் பீடித்துள்ளது. எமதுபுலம்பெயர் மக்களின் இன வழியான ஈடுபாடு அவர்களை மலைக்கவைத்துள் ளது. இவற்றைவிடதாம் இது காறும் தமிழர்களுக்கு இன்னல் களையும் இடர்ப்பாடுகளையும் இடைஞ்சல்களையும் கொடுத்து வந்துள்ளோம் என்ற எண்ணம் இவர்களிடையே மேலோங்கி வரு கின்றது. இனப்படுகொலையை ஏற்காவிட்டாலும் படுகொலைகள் பல தமிழர்க்கெதிராக தம்மால் நடாத்தப்பட்டன என்ற உண்மை அவர்களுள் உறைக்கத் தொடங்கி யுள்ளது. இதனைச் சிங்கள சகோ தர சகோதரிகளே அவர்களுக்கு இடித்துரைத்து வருகின்றனர். சிலவருடங்களுள் ஒருசிறந்த தீர்வை எதிர்பார்க்கலாம் என்றுள் ளது. (ம-3)

# 19 ஆவது திருத்...

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரண்டு வாரத்திற் குள் நிறைவேற்றுவதாக முன் னாள் ஜனாதிபதி வழங்கிய வாக் குறுதி நிறைவேற்றப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரி யாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு கருத் துரைக்கையில் அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். (ம-3)

# குணமடைந்து வீடு திரும்பியவருக்கு...

உறுதிசெய்யப்பட்டது.

அனுராதபுரம் கெபிதிகொல் லாவ பகுதியை சேர்ந்த 36 வய தான பெண்ணொருவரே தொற் றிற்குள்ளாகியுள்ளார்.

குவைத்தில் பணிபுரிந்த நிலை யில் இந்த பெண் அண்மையில் நாடு திரும்பியிருந்தார். தனி மைப்படுத்தப்பட்ட நிலையில் அவ ரிடம் நடத்தப்பட்ட பரிசோதனை யில், அவர் கொரோனா தொற் றிற்கு இலக்கானது தெரியவந்தது.

இதையடுத்து, ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றார். அங்கு அவர் குணமடைந்தது உறுதி செய்யப்பட்ட பின்னர் வீடு திரும்பி யிருந்தார்.

வீடு திரும்பிய பின்னர் அவர் மீண்டும் சுகவீனமடைந்ததை தொடர்ந்து நேற்று அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின்படி, அந்த பெண் கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவர் ஐ.டி.எச் மருத் துவமனைக்கு மாற்றப்பட்டுள் ளார். (ம-3)

# கடலட்டை பிடிப்பதற்கு எதி...

வடமராட்சி கிழக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசத்தின் ஏற்பாட்டில் நண்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இக் கவனயீர்ப்பு போராட்டம் தாளையடியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக ஆரம்பமாகியது.

அங்கிருந்து ஆரம்பமாகிய கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச் சென்று மருதங்கேணி பிரதேச செயலகத்தை சென்றடைந்த னர்.

பேரணியாகச் சென்றவர்கள் நிறுத்து நிறுத்து கடலட்டை தொழிலை நிறுத்து, கடலட்டை பிடிப்போரே உடனடியாக வெளி யேறுங்கள், அத்துமீறிய கடலட்டை அனுமதியை ரத்து செய், நீதிமன்ற தடை உத்தரவை உடனடியாக செயல்படுத்து, கடலட்டை தொழி லால் எமது தொழிலை அழிக் காதே, நமது வளத்தை சுரண்டி நமது வயிற்றில் அடிக்காதே, கடல் எங்கள் வளம் அதனை அழிக் காதே ஆகிய சுலோகங்களை தாங்கியவாறு பேரணியாக சென்ற அவர்கள் கோஷங்களையும் எழுப் பினர்.

தாளையடி மருதங்கேணி வீதி யூடாக பயணித்த கவனயீர்ப்பு போராட்டக்காரர்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்தை வந்தடைந் தனர்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரினால் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், மரு தங்கேணி பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டது.

இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் வடக்கு மாகாணசபையின் முன் னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியை சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், காண்டீபன், சுகாஷ், மணிவண் ணன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரிய குமார், பிரதேச சபை உறுப்பினர் களான தியாகலிங்கம், பிரசாந் தன், பிரேமாகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-3,60)

# முல்லையில் தேர்...

ரத்நாயக்க ஆகியோரின் கண் காணிப்பின் கீழ், மாவட்ட தேர்தல் செயலக அலுவலக அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸார், சுகாதார பிரிவினரின் பங்களிப் புடன், இந்த மாதிரி வாக்களிப்பு நடவடிக்கை நடை பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 250 வாக்காளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்த வாக் கெடுப்பில் 124 வாக்காளர்கள் வாக்களித்துள்ளர்கள்.

திங்கட்கிழமை என்பதால் வரவு குறைவாக காணப்பட்டுள்ள தாக முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபன் தெரிவித்துள்ளார். (ம-3,281)

# பிறந்தநாள்...

மருதனார்மடத்தில் கேக் வெட்டு வதற்கு வாள்வெட்டுக்குழு ஒன்று கூடியுள்ளதாக யாழ்ப்பாணம் பொலி ஸாருக்கு இரகசிய தகவல் கிடைத் துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப் படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மருதனார்மடம் பகுதியில் வைத்து 26 இளை ஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளது டன் 8 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-3,18)

# முல்லையில்...

பேருக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், அவர்களில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த ஒரு வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட 30 பேர், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கியிருந்த 9 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட இருவர், யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்ட ஒரு வர், தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், முல்லைத் தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட ஒருவர், முல்லைத்தீவு பாதுகாப்பு படையினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத் தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ம-3,18)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1149/1159
வர்ணம் ஊதா
15.06.2020 திங்கட்கிழமை
S 11 29 30 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,790,328/-
சீட்டிழுப்பு வாரம் 1149
8 1 1 1

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 921/951
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,648,460/-
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.06.15
வெற்றி இலக்கங்கள் 30 31 32 49 S
கொவிட்-19 தொற்று நோய் காரணமாக 2020.03.23 இல் தடைப்பட்டிருந்த "அத கோடிபதி" லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3317/3325 நீலம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.06.15
ரூ. 39,979,235/-
வெற்றி இலக்கங்கள் 50 60 65 70 L
அடுத்த புதன்கிழமை ஜக்பொட் ரூ. 30,000,000.00
கொவிட்-19 தொற்று நோய் காரணமாக 2020.03.23 இல் தடைப்பட்டிருந்த "சனிக்கிழமை அதிர்ஷ்டம்" லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரங்கள் 2807 2832
வர்ணம் மஞ்சள்
திகதி 15.06.2020
கொவிட்-19 தொற்று நோய் காரணமாக 23.03.2020 இல் தடைப்பட்டிருந்த "ராசி அதிர்ஷ்டம்" லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள் 13 33 47 61
ராசி கடகம்
இது 23.03.2020க்கு உரியது.
ரூ.500 பரிசுக்குரிய 4 0 2 1
ரூ.100 பரிசுக்குரிய 4 2 9
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 2,000,000/=
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

மஹஜன சம்பத
திகதி 2020/06/15
சீட்டிழுப்பு இலக்கம் 4155
D 4 6 8 2 7 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 15-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2449
A 04 05 24 67

மெகா பவர்
திகதி 15/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 524
C 17 14 24 47 74

# கொரோனா வைரஸ் வடக்கில் பரவும் அபாயம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றுதலின் இரண்டாவது அலை வெகுவிரைவில் ஏற்படக்கூடும் என சுகாதாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக வடபகுதிக்கு வரும் இந்திய வர்த்தகர்களின் மூலம் இந்நிலை ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.**

அவ்வாறு ஏற்பட்டால் அது மிகவும் ஆபத்தான நிலையாக மாறும் வாய்ப்புகள் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா ஏற்பட்ட முதலாவது அலையில் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு அருகில் இருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

எனினும் சட்டவிரோதமாக வந்தவர்களை அடையாளம் காணுவதும் பாரிய சிக்கலாக மாறிவிடும் என சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரையில் கொரோனா வைரஸின் தாக்கத்தை இந்தியாவில் கட்டுப்படுத்தவில்லை என்பதனால் நாட்டுக்குள் சட்டவிரோதமாக வரும் இந்திய நபர்களை உடனடியாக நிறுத்தவில்லை என்றால் இலங்கையில் மிகவும் ஆபத்தான நிலை ஏற்படும் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ம-3,114)

# நாட்டில் ஏகாதிபத்திய ஆட்சியே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எங்களுக்கு எந்தப் போட்டியுமில்லை. பொதுஜன பெரமுனவுடனேயே போட்டியிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் கைவிரல் எண்ணிக்கையள வேனும் ஆசனங்கள் கிடைக்காது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி பதுளையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமக்கு எந்தப் போட்டியும் இல்லை. அவர்களுக்கு 5 வீத வாக்குகளும் கிடைக்கப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் 15 பேரே இருக்கின்றனர்.

அவர்களுடன் எமக்கு போட்டியிருக்காது. அவர்கள் அரசாங்கத்துடன் டீல் வைத்துக்கொண்டே செயற்படுகின்றனர். அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கைவிரல் எண்ணிக்கையளவேனும் ஆசனங்கள் கிடைக்காது.

ரணில் விக்கிரமசிங்க எப்போதும் மகிந்த ராஜபக்ஷவுடன் டீல் வைத்துக் கொண்டு செயற்படுகின்றவர்.

மேலும் இந்த அரசாங்கம் தற்போது வீழ்ச்சியடைந் திருக்கின்றது. ஆரம்பத்தில் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையை பெற்றுக் கொள்வதாக தெரிவித்தனர்.

ஆனால் தற்போது அரசாங்கத்தை அமைக்க தேவையான பெரும்பான் மையை பெறுவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் நாட்டின் சட்டம் படுபாதாளத்துக்கு சென்றுள்ளது. ஏப்ரல் தாக்குதலுக்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர் இன்று அந்த கட்சியின் தவிசாளராக இருக்கின்றார்.

அப்படி இருக்கும்போது எவ்வாறு குற்றவாளிகளை இவர்கள் சட்டத்துக்கு முன் நிறுத்துவார்கள். அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் 7 மாதங்களிலே மக்களுக்கு இந்த அரசாங்கம் மீது விரக்தி ஏற்பட்டிருக்கின்றது. ஏகாதிபத்திய ஆட்சியே நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவை அனைத்துக்கும் எதிர்வரும் தேர்தலில் மக்கள் சிறந்த பாடத்தை புகட்டுவார்கள் என்றார். (ம-3)






# ரங்கராஜா காலமானார்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் ரங்கராஜா நேற்றுக் காலமானார்.

சிறந்த நிர்வாகியான ரங்கராஜா யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேரவை உறுப்பினராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# புகையிரத நிலையத்தில் குழப்பம் விளைவித்தவர்கள்

## ஒருநாள் விளக்கமறியலில்

(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை குழப்பம் விளைவித்து புகையிரத நிலைய அதிபரை அச்சுறுத்திய இருவரையும் இன்றுவரை ஒருநாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் மாலை வவுனியா புகையிரத நிலையத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட அரசியல் கட்சி ஒன்றின் இணைப்பாளர் உட்பட இருவர் அங்கு கடமையிலிருந்த புகையிரத நிலைய பணியாளர்களுடன் தகாதவார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டு முரண்பாடுகளை ஏற்படுத்தி புகையிரத நிலைய அதிபரை அச்சுறுத்தி அவர்களது கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

குறித்த நபர்களைக் கைது செய்யாவிட்டால் புகையிரத நிலைய பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதையடுத்து நேற்று முன்தினம் மாலை குறித்த நபர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்கள் இருவரையும் இன்று வரை ஒரு நாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,299)


## வேலையாள் தேவை

கிளிநொச்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு 35 - 60 வயதுக்கு இடைப்பட்ட அனுபவமுடைய ஒருவர் தங்கி நின்று வேலை செய்வதற்குத் தேவை.

- காணி துப்புரவு செய்தல்
- 2 அல்சேசியன் நாய்களைப் பராமரித்தல்

தங்குமிடம் இலவசம். தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதமும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-9708)

தொடர்புகளுக்கு:- 077 190 3165

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவன் வீதி, நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்கு அண்மையில் 2 ¾ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (C-9710)

தொடர்புகளுக்கு:- 077 731 8740

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.